**<u>அசல் வழக்கு எண்: 359/2022</u>**

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 05th day of March 2026
வா.சா.2. கண்ணன், த/பெ. அண்ணாமலை,

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விவசாய வேலை செய்கிறேன். நான் இதற்கு முன்னர் நீதிமன்றத்தில் சாட்சி சொன்னது கிடையாது. இந்த வழக்கில் சாட்சி சொல்ல வெளிவூரில் இருந்து ஒருவர் வந்து என்னை அழைத்தார். அவர் பெயர் ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் நிரூபண வாக்குமூலத்தில் என்ன எழுதிவுள்ளது என எனக்கு தெரியாது. எனக்கு படிக்க தெரியாது. என்னிடம் காட்டப்படும் நிரூபண வாக்குமூலத்தில் கையெழுத்து கேட்டார்கள் நான் கையெழுத்து போட்டேன். அதில் என்ன எழுதிவுள்ளது என எனக்கு தெரியாது. இந்த வழக்கை பார்த்தீபன் மீது நிலம் வாங்குவது சம்மந்தமாக தாக்கல் செய்துள்ளார்கள். யார் வழக்கு போட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் இந்த வழக்கு ஒப்பந்தத்திற்கு முன்னரும் வேறு இதே நபர்களுக்குள்ளான 4 பத்திரங்களில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். முதல் கையெழுத்து கண்ணமங்கலம் நெட் செண்டரிலும், 2 வது குப்பம் சுப்பிரமணியர் கோவில் அருகிலும், 3 வது கண்ணமங்கலம் சார் பதிவு அலுவலகத்திலும் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தில் நான் கையெழுத்து போடுவதற்கு முன்னர் அன்றைய தேதியிலேயே ஒரு கிரைய பத்திரம் எழுதி பதிவு செய்தார்களா என்றால் ஆமாம். அதில் நான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். அதில் தான் பார்த்தீபன் 25 செண்ட் கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தம் யார் எங்கு வைத்து தயார் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தில் கிரையம் வாங்கிய நபர் அப்போது மிலிட்டிரியில் இருந்ததால் அதில் கையொப்பம் போடவில்லை. வா.சா.ஆ.1ல் என்ன எழுதி இருந்தது என என்னிடம் படித்து காட்டினார்கள். ஆனால் நாளாகிவிட்டால் மறந்துவிட்டது. உண்மையில் பிரதிவாதியிடம் நான்கு, ஐந்து பத்திரங்களில் அடித்து கையெழுத்து வாங்கினோம் என்றும் அந்த விவரத்தை எல்லாம் நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் தெரிவிக்காததால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ள தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |